بسم الله الرحمن الرحيم

## ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 17.10.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:–

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஒரு சொற்றொடரை ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறியவரும், பெரியவரும் அறிந்திருக்கின்றனர். அது நான் மார்க்கத்திற்கு உலகத்தை விட முக்கியத்தவம் வழங்குவேன் என்பதாகும். ஏனென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் நமக்கு இதன் பக்கம் அதிகமாக கவனமூட்டியுள்ளார்கள். நமது சொற்பொழிவாளர்களின் பெரும்பாலான சொற்பொழிவுகளிலும், எழுத்துக்களிலும், அவ்வாறே கலீஃபாவின் சொற்பொழிவுகளிலும் பொதுவாக இந்த சொற்றொடர் பயன்படுத்தப்படுகின்றது. பைஅத் நிபந்தனைகளின் சுருக்கமும் இதுவேயாகும். அதாவது மார்க்கத்திற்கு உலகத்தை விட முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறே எல்லா கிளை அமைப்புகளின் உறுதிமொழியின் சுருக்கமும் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குவேன் என்பதாகும். இவ்வாறே பைஅத் செய்கின்ற போது நாம் கூறுகின்ற சொற்களிலும் நாம் இந்த சொற்களை திரும்ப திரும்ப கூறுகின்றோம். சுருக்கமாக இந்த சொற்றொடர் அஹ்மதி செய்கின்ற உடன்படிக்கையாகும். அதில் அவரது பைஅத் சார்ந்திருக்கின்றது. கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்புடன் இணைந்திருப்பது சார்ந்திருக்கின்றது. இது இல்லையென்றால் பைஅத் செய்ததாக வாதம் செய்வது தவறாகி விடுகின்றது. ஜமாஅத் அமைப்புடன் இணைந்திருக்கின்றோம், கிலாஃபத்துடன் இணைந்திருக்கின்றோம் என்ற வாதம் தவறாகி விடுகின்றது. பைஅத்தின் அறிவிப்பும் இறைவனின் திருப்தியை பெறுவதாக கூறப்படும் விஷயங்களும் நாவலளில் மட்டும் கூறப்பட்ட விஷயங்களாகவே ஆகிவிடுகின்றன. எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தல் இவ்வாறு கூறுகின்றார்கள். ஒருவர் பைஅத் செய்யும் போது நான் மார்க்கத்திற்கு உலகத்தை விட முக்கியத்துவம் வழங்குவேன் என்பதை ஏற்றுக் கொண்ட பிறகு அவர் தனது செயல் மூலம் அதன் உண்மையையும் தனது உடன்படிக்கையை நிறைவேற்றுவதையும் வெளிப்படுத்திக் காட்டவில்லை என்றால், பிறகு இறைவன் அவரை ஏன் பொருட்படுத்த வேண்டும்.

எனவே நம்மில் ஒவ்வொருவரும் இந்த விஷயத்தை எல்லா சமயங்களிலும் நம் கண் முன்னால் வைக்க வேண்டியது அவசியமாகும். இந்த சொற்றொடரிலிருந்து மார்க்க விவகாரத்தில் எந்தவொரு உலகப் பொருளும் தடையாக இருக்கக்கூடாது என்பது தெளிவாகத் தெரிகிறது. மார்க்கம் என்றால் என்ன. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தவாறு தனது வாழ்க்கையை கழிப்பதாகும். தனது ஒவ்வொரு சொல்லாலும் செயலாலும் இறைவனைத் திருப்திபடுத்துவதாகும். எனவே இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கான அடிப்படையான விஷயம் நல்லெண்ணமாகும். இதில் எவ்விதமான காரணத்தைக் கூறுவதும், அல்லது சாக்குப்போக்குகளை தேடுவதும் இருக்கக்கூடாது. உலக விவகாரங்களில் நாம் பார்க்கின்றோம். ஒவ்வொரு மனிதனின் வட்டமும் பல்வேறு விதமாக இருக்கின்றது. ஒருவரது முயற்சி ஒரு எல்லைக்குட்பட்ட வட்டத்திற்குள் இருக்கும். ஏனென்றால் அந்த பொருளை பெருவதற்கான அவருக்கு இருக்கின்ற அறிவும், தகுதியும் ஒரு எல்லைக்கு உட்பட்டதாக இருக்கின்றது. சில நேரங்களில் இப்படியும் நிகழ்கின்றது. அவர் முன்னுரிமை வழங்குகின்ற மற்ற விஷயங்கள் அவரது இந்த பணியில் தடைகளாக ஆகி விடுகின்றன. அதை ஒரு எல்லைக்குட்பட்டதாக அது ஆக்கி விடுகின்றது. இன்னொருவரது முயற்சி அதிகமாக இருக்கும். சரியான முறையில் அது செய்யப்பட்டு இருக்கும். எந்த நோக்கத்தைப் பெற வேண்டியது இருக்கின்றதோ அதன் மீது மட்டுமே அவரது பார்வை இருக்கும். பிறகு அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறி விடுகின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் இந்த கருத்தை விளக்கிக் கூறியுள்ளார்கள். அதிலிருந்தும் பயனடைந்தவாறு அதன் ஒளியில் சிலவற்றைக் கூறுவேன். குறிப்பாக சில சம்பவங்கள் உள்ளன. அவற்றை கூறுவேன். ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்கு இருந்தவாறு செய்யப்படும் முயற்சி மற்றும் தனது நோக்கத்திற்கு ஏற்ப செய்யப்படும் முயற்சி ஆகியவற்றை விளக்குவதற்காக ஒரு பொதுவான உதாரணத்தை அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். சில மக்கள் எவ்வளவு முக்கியமான வேலையாக இருந்தாலும் நடந்து செல்கின்ற போது அவர்களது ஆடை சரியாக இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்வார்கள். குறிப்பாக ஆசிய சமுதாயத்தில் ஆண்கள், பெண்கள் ஆகியோரது நிலை இவ்வாறு இருக்கின்றது. தங்களது ஆடை தொடர்பாக அவர்கள் மிகவும் அதிகமாக கவனம் செலுத்துகின்றனர். ஆனால் இதற்கு எதிரில்

இப்படிப்பட்டவர்களும் இருக்கின்றனர். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பேஷன் செய்கின்றனர். இதில் மிகவும் அக்கறை காட்டுகின்றனர். ஆனால் அவர்களுக்கு முன்னால் ஏதாவது நோக்கம் இருந்தால் அவர்கள் தங்களது அலங்காரத்தையும், பேஷனையும் அதற்காக தியாகம் செய்து விடுகின்றனர். தங்களது நோக்கத்தை அடைய வேண்டும் என்பதற்காக அவர்களது ஆடை சீர்குலைந்து போனாலும் கூட ஓட வேண்டியது வந்தால் அவர்கள் ஓடுகின்றனர். எங்காவது அமர வேண்டியது வந்தால் அமர்ந்தும் விடுகின்றனர். எதுவரை என்றால் தூசியும் மண்ணும் இருக்கின்ற இடங்களில் கூட அவர்கள் எவ்வித தயக்கமுமின்றி நடந்தும் செல்வர். ஏன் அவ்வாறு செய்கின்றனர். இந்த பொருளைப் பெற வேண்டும். இந்த நோக்கம் நிறைவேற வேண்டும் என்பது அவர்களது அசல் நோக்கமாக இருக்கும். இன்னொரு உதாரணத்தை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். இங்கிலாந்து வரலாற்றில் நடந்த சம்பவத்தின் உதாரணமாகும் இது. முதலாவது எலிசபத் ஏறக்குறைய 1558 – ல் இவர் அரியணையில் அமர்ந்தார். ஏறக்குறைய 45 ஆண்டுகள் இவர் ராணியாக இருந்திருக்கின்றார். இவர் மிகவும் புகழ்பெற்ற ராணியாவார். இன்னும் சொல்வதென்றால் இங்கிலாந்தின் மகத்துவம் மற்றும் ஆற்றலின் அடித்தளம் இவரது காலத்தில் தான் போடப்பட்டது. ராணி தொடர்பாக மிகவும் பிரசதிபெற்ற விஷயம் என்னவென்றால், ராணி தனது தர்பாரில் தனக்கு அருகில் இருப்பவர்கள் நல்ல ஆடையை அணிந்திருப்பவர்களாகவும், நல்ல தோற்றத்தை உடையவர்களாகவும் இருப்பதை பார்க்க விரும்பினார்கள். எவரது ஆடை உயர்வானதாக இல்லாமலும், விலைமதிப்பற்றதாகவும் இருக்குமோ அவர் தர்பாருக்கு வர முடியாது. எனவே ராணிக்கு அருகில் அழகிய தோற்றத்தை உடைய மற்றும் அழகிய ஆடையை அணிந்துள்ள இளைஞர்களின் கூட்டம் இருந்து வந்தது என்று கூறப்படுகிறது. ஒரு முறை ராணி தனக்கு நெருக்கமானவர்களுடன் சேர்ந்து எங்கே சென்று கொண்டிருந்தார். நடந்து சென்று கொண்டிருக்கும் போது வழியில் சேறு படிந்திருந்தது. அப்போது ராணியுடன் இங்கிலாந்தின் கடற்படை தளபதி இருந்தார். அவர் ராணிக்கு மிக நெருக்கமானவரும் நம்பிக்கைக்கு பாத்திரமானவரும் ஆவார். அவர் மிகவும் சிறந்த அழகிய ஆடையை அணியக்கூடிய இளைஞராக இருந்தார். வழியில் சேறு படிந்திருப்பதைப் பார்த்ததும் அவர் தான் அணிந்திருந்த விலைமதிப்புள்ள கோட்டை அதுவும் தர்பாரில் செல்லும் போது குறிப்பான நேரத்தில் அணியக்கூடிய அந்த கோட்டை சேறு படிந்திருக்கக்கூடிய அந்த அந்த மிகவும் சிறிய இடத்தின் மேல் போட்டார். ராணிக்கு இதைப் பார்த்து மிகவும் வியப்பாக இருந்தது. இவ்வளவு விலைமதிப்புள்ள கோட்டை இவர் சேற்றில் போட்டுவிட்டாரே என்று மிகவும் வியப்புடன் இதுபற்றி ராணி அவரிடம் கேட்டார். அந்த தளபதியின் பெயர் சர் வால்டர் ரேலி ஆகும். ராணி அவரிடம் இது என்ன செய்து விட்டீர் என்று கேட்டார். அப்போது அந்த அதிகாரி உடனடியாக ராணி காலில் அணிந்துள்ள காலணிகள் மோசமாகி விடுவதை விட ரேலியின் கோட் மோசமாவது சிறந்தாகும் என்று அவர் பதில் கூறினார். இந்த உதாரணத்திலிருந்து உயர் அதிகாரியாக இருந்த ரேலி அழகிய ஆடையை அணிபவராகவும் அழகிய தோற்றத்தை உடையவராக இருந்தும் கூட ராணியின் விவகாரம் அவர் முன்னால் வந்த சமயத்தில் அவர் தனது அழகிய தோற்றத்தையும், பேஷனையும் ராணிக்காக தியாகம் செய்து விட்டார் என்ற படிப்பினையையும் நாம் பெறுகின்றோம். ஒரு உலகவாதி ராணியை மகிழ்விப்பதற்காக பேஷனை விட முடியுமென்றால், தனது விலை மதிப்புமிக்க கோட்டை தியாகம் செய்ய முடியுமென்றால், தனது வடிவத்தை தோற்றத்தை அவருக்காக மாற்றிவிட முடியுமென்றால் பிறகு நாம் சிந்திக்க வேண்டும். மார்க்கத்தின் முன்னேற்றத்திற்காகவும், இஸ்லாத்தைப் பரப்புவதற்காகவும், மார்க்கத்தை வலுப்படுத்துவதற்காகவும் அதை நிலைநாட்டுவதற்காகவும் தன்னைப் படைத்த இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக என்னவெல்லாம் நாம் செய்ய வேண்டும்.

ரேலிக்கு தனது ராணியின் மகிழ்ச்சி எந்த அளவிற்கு பிரியமானதாக இருந்ததோ அந்த அளவு கூட நமது குறிக்கோள் நமக்கு பிரியமானதாக இல்லையா? உலக அரசர்களை மகிழ்வித்ததன் காரணமாகவும், பல தொண்டுகளை செய்திருந்தும் கூட ரேலியின் முடிவு வேதனைமிக்கதாக இருந்தது. அல்லாஹ்வை மகிழ்வித்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்று மனிதன் இவ்வுலகிலும் அவனது அருளுக்கு வாரிசாகி விடுகின்றான். அவனது முடிவும் சிறந்தாக இருக்கும்.

எது வரை தமது குறிக்கோளுக்கேற்ப தியாகங்களும் அர்ப்பணிப்பும் இருக்காதோ அதுவரை நோக்கங்கள் உயர்வானதாகவும் சிறப்பானதாகவும் இருப்பது போதுமானதல்ல என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நமது உலகம் நமது மார்க்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருந்தால் தான் இறைவனின் திருப்தி நமக்கு கிடைக்கும். மாறாக, மார்க்கம் உலகத்தின் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும். நமது இளைஞர்களும், இளம் பெண்களும் இந்த விஷயத்தை கவனத்தில் வைத்து செயல்பட்டால் இன்னும் சொல்வதென்றால், இவர்களது பெற்றோர்களும் இதனை கவனத்திற் கொண்டு செயல்பட்டால் மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவதன் மூலமாக வீடுகளிலுள்ள பிரச்சனைகளும் முடிவுக்கு வந்துவிடும். ஒரு நம்பிக்கையாளரின் குறிக்கோளாக

இருக்கின்ற அந்த நோக்கமும் நிறைவேறி விடும். அது இறைவனது திருப்தியைப் பெறுவதாகும். இவ்வாறே ஆடை இருக்கின்றது. சிறந்த ஆடை அணிவது தடுக்கப்பட்டதல்ல. ஆனால மார்க்கப் பணிகளிலிருந்து கவனமற்றவர்களாக ஆகும் நிலையில் எல்லா சமயத்திலும் இந்த பேஷனில் மூழ்க இருப்பது கண்டிப்பாக தடுக்கப்பட்டிருக்கின்றது.

இஸ்லாம் ஒருபோதும் நீங்கள் மார்க்க வேலைகளிலிருந்து கவனமற்றவர்களாக இருந்து விடாதீர்கள் என்று கூறுகிறது. அப்போது தான் நீங்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை செலுத்தக்கூடியவர்களாக விளங்குவீர்கள். இவ்வாறே சிறந்த உணவை உண்பதும் தடுக்கப்பட்டதல்ல. ஆனால் மார்க்க பணிகளில் இது தடையாக இருப்பது தடை செய்யப்பட்டுள்ளது. ஆக, நாம் நம்முடைய பணிகளில் எப்போதும் இதை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது மார்க்க பணிகளின் போது உலக பணிகள் நம்மை தடை செய்வதிலிருந்தும் நாம் அதை விலக்கி வைக்க வேண்டும். இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இரண்டு விதமான மக்கள் இருக்கின்றார்கள். ஒரு பிரிவினர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு உலக விவகாரங்களிலும், வேலைகளிலும் மூழ்கி விடுகின்றனர். ஷய்த்தான் அவர்களின் தலையின் மேல் சவாரி செய்கின்றான். முழுமையாக அவர்கள் உலகத்தில் மூழ்கி விடுகின்றனர். நான் வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது என்று கூறவில்லை. சஹாபாக்களும் வியாபாரம் செய்தனர். ஆனால் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு நிச்சய உறுதியின் மூலம் உண்மையான ஞானத்தின் மூலமாக அவர்களின் உள்ளத்தை அவர்கள் தூய்மைப்படுத்தினார்கள். இதன் விளைவாகத் தான் அவர்கள் எந்தவொரு மைதானத்திலும் ஷய்த்தானின் தாக்குதலுக்கு தடுமாறவில்லை. எந்தவொரு விஷயமும் அவர்களை உண்மையை வெளிப்படுத்துவதிலிருந்து அவர்களை தடுத்து நிறுத்த இயலவில்லை. கூறினார்கள். எவர்கள் உலகத்திற்காகவே ஆகிவிட்ட அடியார்கள் உலகத்தை வணங்கக்கூடியவர்களாவார்கள். அப்படிப்பட்ட மக்கள் மீது ஷய்த்தான் வெற்றி பெறுவதுடன் தனது ஆதிக்கத்தையும் செலுத்துகின்றான். இன்னொரு பிரிவினர் மார்க்கத்தின் முன்னேற்றத்திற்காக கவலை படக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். அந்த பிரிவினர் ஹிஸ்புல்லாஹ் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் ஷய்த்தான் மற்றும் அவர்களின் படைகள் மீது வெற்றி பெறுகின்றனர்.

உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கும் போது தான் பைஅத்தின் குறிக்கோள் முழுமையாகும் என்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை எடுத்து வைத்தேன். இதன் ஞானத்தைப் பெறுவதற்காக உலக வேலைகளோடு மார்க்க ஞானத்தைப் பெறுவதும் அதை நமது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகும். வெளிப்படையாக ஒரு உயரிய நோக்கத்திற்காக பள்ளிவாசல் செல்கின்றோம். ஆனால் இதற்குப் பின்னால் உலக நோக்கங்களும் இருக்கின்றன. சிறந்த நோக்கத்தைப் அடைவதற்காக சிறந்த உயரிய சிந்தனையையும் அவசியமாகும். மேலும் தியாகங்களும் சுய நலத்திற்காக இல்லாமல் இறைவனுடைய திருப்தியைப் பெறுதற்காக இருக்க வேண்டும். ஆக, பள்ளிவாசலில் மக்கள் அதிகமாக வருவது சிறந்த நோக்கத்தைப் பெறுவதுடன் அல்லாஹ்வின் உரிமையை செலுத்தியவாறு மனிதத் தன்மைக்கான உரிமையை செலுத்துவதாக இல்லை என்றால், மார்க்கம் மற்றும் இஸ்லாத்தைப் பரப்புவதாக இல்லை என்றால் இவை அனைத்தும் வீணானவையாகும். இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகிற்கு எடுத்தரைப்பது நம்முடைய பொறுப்பாகும். அதை நாம் நிறைவேற்ற வேண்டும். திருக்குர்ஆனை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யக்கூடிய பணி நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனுடைய உரிமையை நாம் செலுத்த வேண்டும். உண்மையான இறையடியாராக விளங்க நாம் பள்ளிவாசலை ஒவ்வொரு இடத்திலும் கட்ட வேண்டும். இதனுடைய உரிமையை செலுத்துவதற்காக திட்டம் தீட்ட வேண்டும். மனிதத் தன்மையின் உயர்ந்த முன்மாதிரியை நாம் நிலைநாட்ட வேண்டும். இவை அனைத்தையும் நாம் உலகத்தை பெறுவதுடன் செய்தால் உலகத்தை பெறுவதும் நம்முடைய மார்க்கமாகி விடுகின்றது. அவ்வாறில்லை என்றால் நம்முடைய ஆகுமான பணிகளும் அல்லாஹ்வின் பார்வையில் ஆகுமானதல்ல.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்ற விஷயம் அஹது போரில் பரவியது. அந்த நேரத்தில் பல நாட்களாக பட்டினியாக இருந்தும் போரில் கலந்து கொண்ட ஒரு சஹாபி அந்த நேரத்தில் வெற்றிக்கான சூழ்நிலை தெரிந்ததால் அவரிடமிருந்த சில காய்ந்த பேரீச்சம் பழங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் இந்த விஷயத்தை அவர் கேள்விப்படுகிறார். இந்த விஷயத்தைக் கேட்ட உடனேயே அவர் பேரீச்சம் பழங்களை எறிந்து விட்டு போரில் கலந்து கொண்டு ஷஹீதாகிறார். பாருங்கள். இந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு தன்னுடைய பசிக்கான கவலை அவருக்கு இருக்கவில்லை. மாறாக, இந்த நேரத்தில் பேரீச்சம் பழங்களை சாப்படுவதே குற்றமாகும் என்று அவர் கருதினார். ஏனென்றால் இந்த

நேரத்தில் பேரீச்சம் பழம் சாப்பிடுவது குற்றமாகும் என்று மார்க்கம் கூறியது. ஆக எந்த வேலை மார்க்க வழியில் தடையாக இருக்குமோ அது எவ்வளவு உயர்ந்தாக இருந்தாலும் அது ஆகுமானதல்ல. மேலும் எந்த பணிகள் மார்க்க விஷயங்களில் தடையாக இல்லையோ அது எவ்வளவு நிம்மதியாக இருந்தாலும் அது தீயதல்ல. மாறாக, ஆகுமானதாகின்றது. ஆக, நாம் நம்முடைய உள்ளத்தை அல்லாஹ்வுடைய திருப்தியை பெறக்கூடியதாக ஆக்க முயற்சி செய்ய வேண்டும்.

ஒரு அறிவிப்பில் வருகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை பள்ளியில் அமர்ந்திருந்தார்கள். மக்களும் அன்னாருடன் இருந்தார்கள். இந்த நேரத்தில் மூன்று பேர் வந்தார்கள். இரண்டு பேர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பக்கம் செல்ல ஒருவர் மட்டும் திரும்பி சென்று விட்டார். இரண்டு பேரும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பக்கம் வந்து நின்று விட்டார்கள். அவர்களில் ஒருவர் நபி (ஸல்) அவர்கள் அருகில் இடம் இருப்பதைப் பார்த்து விரைவாக அந்த இடத்தில் அன்னார் அருகில் அமர்ந்து விடுகிறார். இரண்டாவது நபர் மக்களுக்கு பின்னால் அவர் எங்கு நின்று கொண்டிருந்தாரோ அதன் அருகில் காலியாக இருந்த இடத்தில் உட்கார்ந்து விடுகிறார். மூன்றாவது நபர் இடம் இல்லை என்று கருதி திரும்பி சென்று விடுகிறார். நபி (ஸல்) அவர்கள் தனது உரையை முடித்த பிறகு இவ்வாறு கூறினார்கள். நான் உங்களுக்கு அந்த மூன்று நபர்களின் நிலையைப் பற்றி நான் கூறவேண்டாமா. அவர்களில் ஒருவர் அல்லாஹ்விடம் அடைக்கலம் கேட்டார். அல்லாஹ்வும் அவருக்கும் அடைக்கலம் கொடுத்து விட்டான். இரண்டவாது நபர் வெட்கப்பட்டார். அல்லாஹ்வும் அவர் மீது வெட்கப்பட்டான். அதாவது அந்த மஜ்லிஸில் அமர்ந்ததே அவருடைய பாவத்தை போக்குவதற்கு காரணமாக அமைந்து விட்டது. அவர் வெட்கப்கப்ட்டதன் காரணமாக அல்லாஹ் அவருடைய குற்றங்களை மன்னித்து விட்டான். மூன்றாவது நபர் தன்னுடைய முகத்தை திருப்பி விட்டார். அல்லாஹ்வும் தன்னுடைய முகத்தை திருப்பி விட்டான். வெளிப்படையாக இது அந்த மூன்று நபர்கள் வருவது, அமர்வது மற்றும் அவர்களில் ஒருவர் திரும்பி சென்று விடுவது சாதாரண விஷயமாக இருக்கலாம். ஏனென்றால் அந்த மூன்றாவது நபருடைய எண்ணத்தின் படி என் வரை சப்தம் வராது. எனவே இங்கே அமர்வது எந்தப் பயனும் இல்லை என்று அவர் கருதுகிறார். அல்லாஹ்வும் உள்ளத்தின் நிலைமைக்கேற்பவே நடந்து கொள்கின்றான். அல்லாஹ் உள்ளத்தையே பார்க்கின்றான். அவனுடைய அருட்களும் உள்ளத்தின் நிலைக்கேற்பவே இருக்கின்றன.

ஆகவே, உள்ளத்தின் நிலைமை முடிவைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். ஆக இங்கேயும் அல்லாஹ் அவ்வாறே நடந்து கொண்டான். அல்லாஹ் உள்ளத்தின் நிலைமையை பார்த்து எவர் எங்கு வரை முன்னேறிகின்றார். மேலும் எவர் சோம்பேறித் தனத்தை வெளிப்படுத்துகின்றார் என்பதை அறிகின்றான். முதல் இரண்டு நபர்களுக்கு அவர்களுடைய அந்தஸ்திற்கு ஏற்ப அருள் வழங்கப்பட்டது. மூன்றாவது நபர் பேரிழந்தவர் ஆவார். மாறாக, இறைவனின் கோபத்திற்கு ஆளானார். ஆக, நம்பிக்கை கொண்ட ஒருவர் தனக்கு முன்னால் இருக்கக்கூடிய நோக்கத்திற்காக அவர் எந்த அளவு தியாகம் செய்துள்ளார் என்பதை பார்க்க வேண்டும். தேவைக்கேற்ப அவர் தியாகம் செய்திருந்தால் அல்லாஹ்வின் உதவியும் அவனுடைய அருளுக்கு வாரிசாகவும் அவர் ஆகின்றார். தியாகங்கள் எப்போதும் ஆற்றலுக்கேற்பவும், தேவைக்கேற்பவுமே செய்யப்படுகின்றது. ஆற்றலுக்கேற்பவே எப்போதும் தியாகங்கள் செய்ய வேண்டியது கட்டாயமல்ல. சில நேரங்களில் தேவைக்கேற்பவே தியாகம் செய்யுமாறு ஷரீஅத் எதிர்பார்க்கின்றது. ஹதீஸிலும் வருகின்றது.அன்னார் கூறினார்கள். ஒரு தர்ஹம் லட்சக்கணக்கான திர்ஹமை விட முந்திவிட்டது. ஏனென்றால் அந்த நபர் தன்னிடமிருந்த இரண்டு தர்ஹம்களில் ஒரு தர்ஹமை கொடுத்தார். மேலும் ஒரு நபரிடம் இலட்சக்கணக்கில் இருந்தது. ஆனால் அவர் அதிலிருந்து ஒரு லட்சமே கொடுத்தார். ஆனால் அது அவருடைய தகுதிக்கேற்ப வழங்கப்பட்டதல்ல. ஆக, எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் அதாவது உண்மையான நோக்கம் இறைவனுடைய திருப்தியைப் பெறுவதாகும். இவர்கள் இருவரின் தியாகத்திலும் இறைவனுடைய திருப்தியே நோக்கமாக இருக்கின்றது.

ஆக, நம்பிக்கையாளரின் உண்மையான பணி என்னவென்றால், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தன்னுடைய உள்ளத்தின் நிலையை சரி செய்ய வேண்டும். நம்முடைய நோக்கம் இறைவனுடைய திருப்தியைப் பெறுவதேயாகும். அதில் தான் அவனுடைய முன்னேற்றமும் வெற்றியும் இருக்கின்றது. ஆகவே எப்போதும் நாம் எந்த வழியில் மார்க்கத்திற்கு உலகத்தைவிட முக்கியத்தவம் வழங்குவேன். மேலும் இதற்காக நான் எவ்வாறு என்னுடைய முழுமையான ஆற்றலையும் செலவு செய்வேன் என்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இன்று முதல் அன்ஸாருல்லாஹ் இஜ்திமாவும், ஷீராவும் ஆரம்பமாகின்றது. உலகத்தைவிட மார்க்கத்திற்கு முன்னேற்றம் வழங்குவது தொடர்பாக நாம் ஷீராவிலும், இந்த நாட்களிலும் ஆய்வு செய்ய வேண்டும். அன்ஸாருல்லாஹ்வின் வயது எப்படிப்பட்ட வயது என்றால் அதில் அவர்கள் முன்மாதிரியாக விளங்க வேண்டும்.

அல்லாஹ்விற்கு நம்முடைய எந்த பொருளும் தேவையில்லை. மார்க்கத்திற்கு உலகத்தைவிட முன்னுரிமை வழங்குங்கள் என்று அவன் நம்மிடம் கூறியது நம்மீது செய்துள்ள அருளாகும். நான் செல்வம் தொடர்பாக எடுத்துக்காட்டைக் கூறினேன். அதனுடைய அவசியம் இறைவனுக்கு கிடையாது. நம்முடைய எந்த அவசியமும் அல்லாஹ்விற்கு கிடையாது. வெள்ளி, தங்கம், நிலம் போன்ற அனைத்தையும் அவனே படைத்தான். அவன் விரும்பினால் மார்க்கப் பணிகளை செய்பவர்களுக்கு இதை அவன் பங்கிட்டு கொடுத்துவிடலாம். ஆனால் அவன் நம்முடைய நோக்கத்தின் பக்கம் கவனமூட்டியவாறு நம்மை அந்த நோக்கத்தை அடைவதற்காக தியாகத்தின் பக்கம் கவனமூட்டுகின்றான். இதன் மூலமாக நாம் இறைவனுடைய திருப்தியைப் பெற வேண்டும்.

வெறும் செல்வம் மட்டுமல்லாமல் அவன் நமக்கு சந்ததிகளையும் வழங்கியுள்ளான். குழந்தைகளின் தர்பிய்யத்திற்காக அல்லாஹ் வேறு சில வழிகளையும் ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் அவன் தாய் தந்தையிடம் குழந்தைக்கு தர்பிய்யத் கொடுங்கள் என்று கூறினான். அவர்கள் மீது உங்கள் சக்திக்குட்டவாறு உயரிய நோக்கத்தை அடைவதற்காக தியாகமும் செய்யுங்கள். இதன் விளைவாக அவர்கள் மார்க்க பணிகளில் ஈடுபட வேண்டும். ஆக, இது மிகப்பெரிய பொறுப்பாகும். ஒரு அஹ்மதி தாய் தந்தை தன்னுடைய குழந்தைக்கு எந்த அளவிற்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டுமென்றால், அதன் விளைவாக அவர் மார்க்க பணிகளில் ஈடுபட வேண்டும். அப்போது தான் அவர் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குவேன் என்ற உடன்படிக்கையை நிறைவேற்றுபவராவார். எப்படிப்பட்ட தர்பிய்யத் வழங்க வேண்டும் என்றால் குழந்தையிலேயே உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற உணர்வு அவர்களிடம் உருவாக வேண்டும். இங்கு நான் ஒவ்வொரு மட்டத்திலுள்ள பொறுப்பாளர்களிடமும் கூற விரும்புகின்றேன். அதாவது உலகத்தைவிட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என்ற பொறுப்பை நாம் மற்றவர்களை விட நமக்கு அதிகமாக இருக்கின்றது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஒரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவர்கள் மீது பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கின்றது. அதற்காக அவர்கள் தனது தியாகத்தின் தரத்தை உயர்த்துவது அவசியமாகும். இவ்வாறே ஒவ்வொரு மட்டத்திலும் தன்னுடைய தகுதிக்குட்பட்டவாறு முழுமையான முறையில் தன்னுடைய உடன்படிக்கையை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் பார்வை உள்ளத்தின் மீதுள்ளது என்பதை நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். அல்லாஹ் துடிப்புடன் பணியாற்றக்கூடியவர்கள் மீது அருளைப் பொழிகின்றான். தனது நெருக்கத்தை வழங்குகின்றான். ஒரு பொறுப்பாளருக்கு இந்த இடத்தை அடைவதற்கு முழுமையான முறையில் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு மட்டத்திலும் இருக்கக்கூடிய பொறுப்பாளர்களுக்கும், எனக்கும் மேலும் உங்கள் அனைவருக்கும் மார்க்கத்திற்கு உலகத்தைவிட முன்னுரிமை வழங்கக்கூடிய உடன்படிக்கையை முழுமையான முறையில் அமல் செய்யக்கூடிய நல்வாய்ப்பை வழங்குவானாக.

இன்றும் ஒரு வருத்தத்திற்குரிய செய்தி. பாகிஸ்தானில் ஒரு ஷஹாதத் நடைபெற்றுள்ளது. மதிப்பிற்குரிய குர்ஷீத் ஆலம் பட் சாஹிபின் மகனான மதிப்பிற்குரிய லதீஃப் ஆலம் பட் சாஹிபுடையதாகும். 15 அக்டோபர் அன்று இரவு 7 மணிக்கு வீட்டின் அருகில் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து ஃபாயிரிங் செய்து ஷஹீதாக்கினார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். லதீஃப் ஆலம் பட் சாஹிப் அவர்களின் குடும்பம் குஜ்ரான்வாலா மாவட்டத்தைச் சார்ந்ததாகும். அஹ்மதிய்யத்துடன் ஷஹீத் மர்ஹூமின் குடும்பத்தின் தொடர்பு அவர்களுடைய தந்தை மதிப்பிற்குரிய குர்ஷீத் ஆலம் பட் சாஹிபின் மூலமாக ஏற்பட்டது. அவர்களுக்கு 1934 ஆம் ஆண்டு பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. ஷஹீத் மர்ஹூம் 1952 ஆம் ஆண்டு குஜ்ரான்வாலாவில் பிறந்தார்கள். F.A படிப்பை படித்து முடித்த பிறகு Air Force சேர்ந்தார்கள். 1991 ஆம் ஆண்டு பணியிலிருந்து ரிடாய்ர்டு ஆனார்கள். ஷஹீத் மர்ஹூம் ஷஹாதத்தின் போது நாஸிம் இஷாஅத் அன்ஸாருல்லாஹ் பொறுப்பில் சேவை செய்யக்கூடிய பாக்கியத்தை பெற்றிருந்தார்கள். இது மட்டுமல்லாமல் மாவட்ட ஜியாஃபத் செகரட்டரியாகவும், குத்தாமுல் அஹ்மதிய்யாவின் நாஸிம் செஹத் வ ஜிஸ்மானியாகவும் சேவை செய்யக்கூடிய நற்பாக்கியத்தை பெற்றிருந்தார்கள். ஷஹீது மர்ஹூம் சிறந்த நல்லொழுக்கத்தை கொண்டவராக விளங்கினார்கள். குழந்தைகளின் கல்வி மற்றும் தர்பிய்யத்தில் அதிக கவனம் செலுத்துவதில் அதிக ஆர்வம் இருந்தது. ஷஹாதத்தின் போது அவர்களுடைய வயத 62 ஆகும். வஸிய்யத் படிவத்தை அவர்கள் முழுமைப்படுத்தியிருந்தார்கள். அது பிராஸஸில் இருக்கிறது. இவர்களுடைய வஸிய்யத்தை தற்போது கார்பர்தாஸ் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவர்களுடைய வஸிய்யத்தை நான் அங்கீகரிக்கின்றேன். மூஸி என்ற அடிப்படையில் கார்பர்தாஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அவர்களுடைய குடும்பத்திற்கு பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. பாகிஸ்தானிலுள்ள ஜமாஅத் மக்களையும் அல்லாஹ் பாதுகாப்பானாக. எதிர்ப்பு தன்னுடைய எல்லையை கடந்து விட்டது. அல்லாஹ் விரைவாக நமக்காக அமைதி மற்றும் நிம்மதியிக்கான ஏற்பாட்டைச் செய்வானாக.